3RD

# மூன்றாம் திருப்புதல்தேர்வு - 2014

**10 - ஆம் வகுப்பு** **தமிழ் இரண்டாம் தாள்**

காலம் : 2 .30 மணி மதிப்பெண்கள் : 100

**குறிப்பு : (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது. (ii) விடைகள், தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும். (iii) வினா எண் 38 க்கு என படிவம் ஒன்று தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதை நிரப்பி முதன்மை விடைத்தாளுடன் இணைக்கவும்.**

## பிரிவு - I (மதிப்பெண் 20) பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1 X 5 = 5

1. தலைவன் - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம்.
   அ) ஒளகார குறுக்கம் ஆ) ஐகாரக் குறுக்கம் இ) ஆய்தக் குறுக்கம் ஈ) மகரக் குறுக்கம்
2. கீழ்வருவனவற்றுள் தொடர்மொழி
   அ) அந்தமான் ஆ) மண் இ) படம் பார்த்தான் ஈ) கண்
3. புறத்திணைகள் ........... வகைப்படும். அ) ஐந்து ஆ) ஏழு இ) பன்னிரண்டு ஈ) பத்து
4. ஒருபொருட் பன்மொழியைத் தேர்ந்தெழுதுக.
   அ) வயிறு வலிக்கும் ஆ) செய்வினை இ) புன்கண் ஈ) நடுமையம்
5. பாலை நிலத்திற்குரிய பறவைகள்
   அ) கிளி, மயில் ஆ) நாரை, அன்னம் இ) புறா, பருந்து ஈ) கடற்காகம், கிளி

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** 1 X 5 = 5

6. மலரன்ன சேவடி - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ........ .
7. நிரை கவர்தல் ........... என்னும் புறத்திணைக்குரியது.
8. "மாலை" இச்சிறுபொழுது - திணைக்குரியது.
9. செம்மொழி .............. புணர்ச்சியாகும்.
10. வெண்பாவின் ஓசை ............. .

## பகுதி - 3

**சுருக்கமான விடையளி.** 10 X 1 = 10

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றனுக்குச் சான்று தந்து விளக்குக.
12. உருவகத்தை உவமையாக மாற்றுக - முகமதி.
13. இளமைப் பெயர்களைப் பொருத்துக. ஆடு - கன்று
    சிங்கம் - குட்டி
    - குருளை
14. **கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.**
    இன்று பேருந்து ஓடாது.
15. **கீழ்க்காணும் தொடரில் சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.**
    தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்.
16. **கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.**
    இன்னக்கி ஒரு கிலோ அவரக்கா வாங்கி வந்தேன்.
17. **கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள, பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**
    இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
18. **தொகைச் சொல்லை விரித்தெழுதுக.** மூவிடம்
19. **கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.**
    தமிழ் இளைஞர்களே பெற்றரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள் தமிழ் இன்பத்திலும் சிறந்த இன்பம் இவ்வுலகில் உண்டோ.
20. **உவமைகளைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.** பசு மரத்தாணி போல

## பிரிவு - II (மதிப்பெண் 10 )

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** 5 X 2 = 10

21. ஐகாரக் குறுக்கத்தை - எடுத்துக்காட்டுடன் விளக்குக.
22. பாம்போ? கயிறோ? - எவ்வகை வினா?
23. அடுக்குத் தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
24. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
25. பகுபத உறுப்பிலக்கணம் தருக : புரிந்த.
26. பாடாண் திணை - விளக்குக.
27. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

## பிரிவு - III ( மதிப்பெண் - 50) பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 5 X 2 = 10

28. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?
29. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
    மேவன செய்தொழுக லான் - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.
    (அல்லது) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.
30. **கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.**
    ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
    உயிரினும் ஓம்பப் படும்.

## பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் அரைப் பக்க அளவில் விடையளிக்க.** 2 X 5 = 10

31. மெல்லமெல்லமற - என்னும் சிறுகதையில் கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதை சுருக்கி வரைக.

32. குறட்டை கதையில் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை எழுதுக.
33. எம்.ஜி. இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக.

பகுதி - 3

**கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.** 3 + 2 = 5

34. அ) பாலு பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கட் கிடைச்சுதா? பஸ் டென்தார்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தேன்.

**ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றுக.** 64, 93, 161, 240 3 + 2 = 5

35. **கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க.**

அ) Tree are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs. tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

**ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

i) Old is gold. ii) No pain no gain.
iii) Man proposes, God disposes. iv) A friend in need is a friend indeed.

35. ***குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.***

பகுதி - 4

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** 1 X 5 = 5

36. **அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.**

கதிரவன் மறைந்து காரிருள் மெல்ல வானைக் கவ்வத் தொடங்கியது. கடற்கரையோரமாக ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் பெண் ஒருத்தி கடலை நோக்கி ஓடினார். நில் என்ற குரல் எங்கிருந்தோ ஒலித்தது....... திரும்பினாள் ..... **(அல்லது)**

**ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டுவரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்றை எழுதுக.**

குழந்தை **(அல்லது)** நட்பு

பகுதி - 5

37. **கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி.அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்தெழுதுக.** 1 X 5 = 5

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்போது நான்செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே. - இராமலிங்க அடிகள்

பகுதி - 6

38. **கொடுக்கப்பட்டுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக. பெயர் நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக.** 1 X 5 = 5

பகுதி - 7 3 + 2 = 5

39. **அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க.**

எழிலனும் தமிழரசனும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் எழிலரசனுக்குத் தமிழரசன் மட்டுமே நண்பன். தமிழரசனுக்கோ வகுப்பில் மட்டுமன்றிப் பள்ளிலும் அனைவரும் நண்பர்களே பார்க்கும் யாவரிடத்திலும் அன்பாகவும் நட்பாகவும் பழகுவான். பெரியவர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வான். தன்னால் முடிந்த உதவிகளும் செய்வான். எழிலனும் நல்ல மாணவன் தான் ஆனால் தானாகச் சென்று பழகமாட்டான். வினாவுக்கு மட்டுமே விடை சொல்வான். தமிழரசனிடம் எல்லாரும் நெருங்கிப் பழகுவது எழிலனுக்கு வேதனை தந்தது.

1. இவர்களில் யாரைப் போல இருப்பது நல்லது?
2. தன்னிடம் அனைவரும் நெருங்கிப் பழகுவதற்கு எழிலன் என்ன செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாய்?
3. உங்களுக்கு நண்பர்கள் உண்டா? எத்தனை பேர்?

**ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.**

பேருந்து பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் தோள் மீது யாரோ கை வைப்பதாக உணர்கிறீர்கள். திரும்பிப் பார்த்தால் உங்களுக்கு அறிமுகமானவர் தான். அப்போது உங்கள் செயல்பாடு எப்படியிருக்கும்.

1. இது போன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
2. இது போன்ற நிகழ்வு உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்ட துண்டா?

பிரிவு - IV (மதிப்பெண் - 20) பகுதி - 1

40. **கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** 1 X 10 =10

அ) நும் ஊரில் சாலைகளில் மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரியத் தலைவருக்கு விண்ணப்பம் வரைக. **(அல்லது)**

ஆ) உம் பள்ளியிலிருந்து ஓய்வு பெறும் தமிழாசிரியரைப் பாராட்டி பாராட்டு மடல் ஒன்று வரைக.

பகுதி - 2 1 X 10 = 10

41. **கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

அ) கணினி - தோற்றம் - வளர்ச்சி - இணையம் - இணையதள வசதி - கணினி வழிக்கல்வி - கணினியின் வியத்தகு சாதனைகள் - பயன்படும் துறைகள் - உலகம் உள்ளங்கையில் ***(அல்லது)***

ஆ) பாரதியார் விடுதலைப் போராட்ட வீரர் - கவிஞர் - தமிழாசிரியர் - தேசியக்கவிஞர் - முன்னறி புலவர் - சமுதாயத் தொண்டு - மொழிப்பற்று - புதுமைக் கவிஞன்.